“மாண்புமிக்க ஐம்பது ஆண்டுகள்”

|யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டு: 1974 - 2024|

# கிறிஸ்தவக் கற்கைகளில் இரண்டாவது அனைத்துலக ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புக்கள் பீடம் (கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணி), ஆசியாவின் பொதுவெளி இறையியல் வலைப்பின்னல் ஆகியனவற்றின் இணைந்த ஒழுங்கமைப்பில்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவக் கற்கைகளில் இரண்டாவது சர்வதேச ஆய்வு மாநாடானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புக்கள் பீடம் மற்றும் பொதுவெளி இறையியலுக்கான ஆசிய வலைப்பின்னல் ஆகியவற்றின் இணைந்த பங்களிப்புடன் ஒழுங்கமைக்கப்படுகிறது. இதனை எதிர்வரும் 2024ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01ம், 02ம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டு நினைவு நிகழ்வுகளில் ஒன்றாக நடாத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இம்மாநாடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ‘மாண்புமிக்க கடந்த காலத்திற்கு மரியாதை செலுத்தி, பொன்னான சமகாலத்தைக் கொண்டாடி, நம்பிக்கைமிகு வருங்காலத்தை எதிர்நோக்கும்’ ஒரு பிரமாண்டமான நிகழவாக அமையும்.

## மையப்பொருள்

‘சவால்மிக்க காலங்களில் சமயங்களின் பங்கு’

## ஆய்வு மாநாட்டின் பின்னணி

‘கிறிஸ்தவக் கற்கைகளில் முதலாவது அனைத்துலக ஆய்வு மாநாடு’ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத் துறையால், யாழ்ப்பாணத் திருமறைக் கலாமன்றத்தின் அனுசரணையோடு 2018ம் ஆண்டு மார்கழி மாதம் 07ம், 08ம் திகதிகளில் நடாத்தப்பட்டது. அதன் அடுத்த கட்டமாக, தொடரில் இரண்டாவது ஆய்வு மாநாட்டை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புக்கள் பீடத்தில் கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணிப் பட்டத்தை வழங்கிவரும் கிறிஸ்தவ நாகரிகத்துறை, பொதுவெளி இறையியலுக்கான ஆசிய வலைப்பின்னலோடு இணைந்து நடாத்தவுள்ளது. இது 2024ம் ஆண்டு மாசி மாதம் 01ம், 02ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

## நோக்கு

அனைத்து மக்களின் பொதுவாழ்வு, பொதுநலன்கள் ஆகியவற்றோடு தொடர்புபட்ட பல்வேறு தளங்களில் எவ்வித பாரபட்சமுமின்றிச் செயற்படும் குறிப்பிடத்தக்க பங்காளியாக ஆசியச் சூழமைவில் கிறிஸ்தவம் திகழ்கிறது. ஆகவே கிறிஸ்தவ கற்கைகளில் நடாத்தப்படும் இரண்டாவது அனைத்துலக ஆய்வு மாநாடானது ஏனைய விடயங்களோடு, இலங்கையிலும் பல்வேறு ஆசிய நாடுகளிலும் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்காகவும், ஜனநாயகத்தின் முக்கிய அம்சங்களைப் பேணுவதற்காகவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய கிறிஸ்தவத்தின் முயற்சிகளை அறிவியல் பூர்வமான முறையியல் சார்ந்த ஆய்வுகளின் வழியாக ஆவணப்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது.

## இலக்குகள்

மேற்படி நோக்கின் அடிப்படையில் ஆய்வு மாநாட்டின் இலக்குகளாகப் பின்வருவன முன்வைக்கப்படுகின்றன:

- 'காலத்தின் அறிகுறிகள்' மற்றும் 'புதிய சாதாரணநிலை' அகியவற்றிற்கான கிறிஸ்தவத்தின் பதிலளிப்பை ஆய்வு செய்தல்
- ஆசிய நாடுகளின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிலும் ஜனநாயகத்தின் முக்கிய அம்சங்களைப் பேணுவதிலும் கிறிஸ்தவத்தின் வகிபாகத்தை அளவிடுதல்
- ஜனநாயக அரசியல், ஜனரஞ்சக வாதம், பொது நன்மை, குடியியல் உரிமைகள், கண்ணியமான குடியியல் வாழ்வு, உலக நாடுகளில் குறிப்பாக ஆசியாவில் சமூகநீதியும் அமைதியும் போன்றவற்றை நிலைநிறுத்த கிறிஸ்தவம் ஆற்றும் பங்களிப்பைச் சீர்தூக்கிப்பார்த்தல்
- காலனித்துவம், பின்நவீனத்துவம், பூகோளமயமாதல் போன்ற நவீன போக்குகளால் அழிவின் விளிப்புக்குத் தள்ளப்பட்டுள்ள உள்ளூர்ப் பண்பாடுகள், கலைகள், இலக்கியங்கள் போன்றவற்றைப் பாதுகாப்பதில் கிறிஸ்தவத்தின் பங்களிப்பை மதிப்பீடு செய்தல்
- கிறிஸ்தவத்தின் வரலாற்றை அதன் உள்ளூர்ச் சூழமைவுகளில் ஏழைகள், விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டவர்களுடனான தோழமை மற்றும் அவர்களது வலுவூட்டல் நோக்கில் மீள்விசாரணைக்கு உட்படுத்தல்
- ஆசிய நாடுகளின் வேறுபட்ட அரசியல் பொது, சூழமைவுகளில் பொதுவெளி இறையியலில் ஈடுபடுவதற்கான இறையியல் தெளிவை உருவாக்குதல்

## மாநாட்டின் கருத்துக் குறிப்பு

பல்வேறு முரண்பாடுகள், வன்முறை, அநீதி, ஒடுக்குமுறைகள், உயிருக்கு எதிரான கருத்துக்கள் நடைமுறைகள், தனிநபர்வாதம், பூகோளமயமாதலின் தீய விளைவுகள், அதிகரித்துவரும் சுற்றுச்சூழல் சவால்கள் போன்றவற்றுடன் கூடிய தற்போதய உலக ஒழுங்கு புதியதொரு புலக்காட்சியை உருவாக்கியுள்ளது. இத்தகைய ஒரு சூழலில் ஆசிய நாடுகளில் காலத்தின் அறிகுறிகளுக்கு ஆக்கத்திறனுடனும் செயலூக்காத்துடனும் அகன்ற பொது வெளியில் பொருளுள்ள வகையில் பதிலிறுக்கவும் ஜனநாயக அமைப்பு, ஜனரஞ்சக வாதம், பொது நன்மை, குடியியல் உரிமைகள், சிறந்த குடியியல் வாழ்வு, சமூகநீதி, அமைதி போன்றவற்றின் நிலைபேறான பேணுகைக்கு பங்களிப்புச் செய்யவும் கிறிஸ்தவம் அழைக்கப்படுகின்றது. அந்த வகையில் இம்மாநாடானது கிறிஸ்தவம் ஏனைய சமயங்களோடு இணைந்து கீழ்நிலையில் உள்ள மக்களுக்கு அறிவூட்டியும், குடியியல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தியும், அவர்களது பொது வாழ்வின் மேலெழும் முகிழ்ப்பிற்கு பங்களிப்புச் செய்தும், தனது தோழமையினால் ஏழைகள் ஒடுக்கப்பட்டவர்களுக்கு சமூக பொருளாதார வலுவூட்டலை மேற்கொண்டும் அவர்களது வாழ்வில் ஒரு அமைதிப் புரட்சியை ஏற்படுத்துவதில் ஒரு சகபங்காளியாக இருப்பது குறித்த விழிப்புணர்வு மட்டத்தை அதிகரிக்கும். இத்தகைய வரலாற்றுப் பங்களிப்புகள் ஜனநாயகத்தின் தொடர்ச்சியான முதிர்ச்சிக்கும் சமகால சவால்களின் மத்தியில் சமூகத் தீமைகளை அகற்றுவதற்கும் ஆசியக் கிறிஸ்தவத்தை மேலும் பொறுப்புள்ளதாக்கும். இது கிறிஸ்தவ சமயம் தன்னை ஒரு பொது அமைப்பாக அரசு, ஏனைய சமயங்கள், குடிமைச் சமூகம் மற்றும் தனிநபர்களுடனான புதுப்பிக்கப்பட்ட புரிதலுடன் கூடிய உறவிலே தனது சுய அடையாளத்தை மீளமைத்துக்கொள்ள உதவும். இந்தப் பொதுவெளி இறையியலை உருவாக்கும் ஒரு வழியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புக்கள் பீடம் பொதுவெளி இறையியலுக்கான ஆசிய வலைப்பின்னலோடு இணைந்து ஒரு அனைத்துலக அய்வு மாநாட்டை ஒழுங்கமைக்கின்றது.

## ஒழுங்கமைப்பாளர்கள்

- **பட்டப்படிப்புக்கள் பீடம் (கிறிஸ்தவ கற்கைகளில் முதுமாணிக் கற்கைநெறி)**

பட்டப்படிப்புக்கள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதினொரு பீடங்களில் ஒன்றாகும். அதே பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத்துறையினால் கல்விப்புல ரீதியாக ஒழுங்கமைக்கப்படும் 'கிறிஸ்தவ கற்கைகளில் முதுமாணி' என்னும் கற்கை நெறியினையும் இப்பீடம் நிர்வகிக்கின்றது. இவ்வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புக்கள் பீடமும், கிறிஸ்தவ நாகரிகத்துறையும் இம்மாநாட்டின் உள்ளூர் ஒழுங்கமைப்பாளர்களாக உள்ளனர்.

- **பொதுவெளி இறையியலுக்கான ஆசிய வலையமைப்பு**

பொதுவெளி இறையியலில் ஆய்வுகளை மேற்கொள்ளும் உயர் கல்வி நிறுவனங்களின் பாரிய வலையமைப்பாகிய பொதுவெளி இறையியலுக்கான உலக வலையமைப்பிலிருந்து உருவாக்கப்பட்ட பிராந்திய அமைப்பே பொதுவெளி இறையியலுக்கான ஆசிய வலையமைப்பாகும். எல்லா கண்டங்களிலிருந்தும் உறுப்பு நிறுவனங்களைக் கொண்ட வலையமைப்பு என்ற வகையில் பொதுவெளி இறையியலுக்கான உலக வலையமைப்பு சமகால உலகின் கரிசனைகள் குறித்த பொதுக் கருத்துகளுக்கு கிறிஸ்தவத்தின் புலமைசார் பங்களிப்புகளை ஊக்குவித்து வருகின்றது. (ref. gnpublictheology.net) மேலும் பிறில் (BRILL) நிறுவனத்தால் வெளியிடப்படும் பொதுவெளி இறையியலுக்கான சர்வதேச சஞ்சிகையின் வெளியீட்டுக்கும் துணை செய்து வருகின்றது.

## மாநாடு நடைபெறும் வழிமுறை

நேரடி மற்றும் மெய்நிகர் (இணையம்) வழிமுறைகள் கூடிய கலப்பு முறையில் மாநாடு இடம்பெறும்.

## இணைத் தலைப்புக்கள்

பின்வரும் இணைத் தலைப்புக்களின் பட்டியல் முழுமையானது அல்ல. ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சொந்த இணைக்கருப்பொருள்களை மாநாட்டின் பிரதான மையக்கருத்திலிருந்து விலகாது உருவாக்கி தமது ஆய்வுகளை மேற்கொள்ள முடியும்.

1. பொது நன்மைக்கான சமயங்கள் மற்றும் கருத்தியல்கள்
2. பொதுவெளி இறையியல்: எண்ணக்கரு, வரலாறு மற்றும் ஆசிய நாடுகளுக்கு அதன் பொருத்தப்பாடு
3. திரு அவைகளின் சமூகப் போதனைகள்: பொதுவெளி இறையியல் ஆய்வுகள்
4. திருவிவிலியம் ஒரு பொதுவெளி நூல்: ஆசியக் கண்ணோட்டங்கள்
5. கலாசாரங்கள் மற்றும் சமயங்களின் உரையாடல்: வாய்ப்புக்களும் சவால்களும்
6. விஞ்ஞான - சமய உரையாடலும் ஆசியாவின் பொதுக்கொள்கைகளும்
7. ஆசிய அரசுகளும் ஆசியக் கிறிஸ்தவச் செல்நெறிகளும்
8. ஆசியாவில் கிறித்தவம் எதிர்கொள்ளும் 'சிறுபான்மை' பற்றிய வினாக்கள்
9. ஆசியக் கிறித்துவத்தால் பேசப்படும் பாலினப் பிரச்சினைகள்
10. ஆசியக் கிறிஸ்தவமும் சமயங்களின் பல்வகைமையும்
11. ஆசியக் கிறிஸ்தவமும் சிவில் சமூகமும்
12. ஆசிய நாடுகளில் கல்வியும் கிறிஸ்தவமும்
13. ஆசியாவில் சமயங்களும் பொதுத் துறைகளும்
14. சேரிப்புறங்களின் வாழ்வை பொதுவெளி இறையியலாக்கம் செய்தல்
15. இலங்கையில் கிறிஸ்தவமும் அதன் சுதேசச் சூழமைவும்

## ஆய்வுக் கட்டுரைக்கான அழைப்பு

ஆய்வு மாநாட்டின் முதற் கட்டமாக, மாநாட்டின் கருப்பொருளின் பல்வேறு இணை அம்சங்களை மையப்படுத்தும் வகையில், *500* சொற்களுக்கு மிகாமல் ஆய்வு முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பொதுவெளி இறையியல் துறையில் அனைத்துலக மற்றும் சுதேச ஆய்வாளர்களிடமிருந்து அவர்களின் சொந்தச் சூழமைவைப் பிரதிபலிக்கும் ஆய்வுகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஆய்வு மாநாட்டிற்கு தங்களின் பங்கேற்பு நேரடியாகவா அல்லது இணையத்தினூடாகவா இடம்பெறும் என்பதையும் ஆய்வு முன்மொழிவில் குறிப்பிடவும்.

## ஆய்வுச் சுருக்கங்களை அனுப்புதல்

**மதிப்பீட்டுக் குழு:** irccs@univ.jfn.ac.lk

## தலைமை

பேராசிரியர் S. சிறிசற்குணராஜா, துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## இணைத் தலைமை

பேராசிரியர் S. கண்ணதாசன், பீடாதிபதி, உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பேராசிரியர் ஞான பேட்றிக், மாண்புமிகு பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம், இந்தியா

## ஒருங்கமைப்பாளர்

பேராசிரியர், அருட்தந்தை J.C. போல் றொகான், துறைத்தலைவர், கிறிஸ்தவ நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## நிறைவேற்றுக் குழு

அருட்தந்தை M.V.E. இரவிச்சந்திரன், முதுநிலை விரிவுரையாளர், கிறிஸ்தவ நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

திருமதி M.W. சுரேந்திரராஜ், முதுநிலை விரிவுரையாளர், கிறிஸ்தவ நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## ஆலோசனைக் குழு

பேராசிரியர், அருட்தந்தை A.J.V. சந்திரகாந்தன், ரொறன்ரோ பல்கலைக்கழகம், ஒன்ராறியோ, கனடா

பேராசிரியர் லாப் யான் குங், சங் சி கல்லூரி, ஹொங்காங்

அருட்கலாநிதி A.F. ஜெயசேகரம், இயக்குநர், நெய்தலம், யாழ்ப்பாணம், இலங்கை

## இணைய ஆலோசகர்

கலாநிதி E.Y.A. சார்ல்ஸ், கணினி அறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொருளாளர்

திரு. S. பிரணவன், உதவிப் பதிவாளர், பட்டப்பின் படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## மதிப்பீட்டுக் குழு

*பேராசிரியர் ஞான பேட்றிக், மாண்புமிகு பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம், இந்தியா*

*பேராசிரியர், அருட்தந்தை J.C. போல் றொகான், துறைத்தலைவர், கிறிஸ்தவ நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை*
*பேராசிரியர் லாப் யான் குங், சங் சி கல்லூரி, ஹொங்காங்*

## தலைமைப் பதிப்பாசிரியர்

*அருட்தந்தை M.V.E. இரவிச்சந்திரன், முதுநிலை விரிவுரையாளர், கிறிஸ்தவ நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை*

## மொழிகள்

*ஆங்கிலம், தமிழ்*

## நினைவில் கொள்ள வேண்டிய முக்கிய திகதிகள்: (GMT + *5:30*)

*முன்மொழிவை வழங்க வேண்டிய இறுதி நாள்: 30 கார்த்திகை 2023*
*முன்மொழிவு ஏற்பு அறிவிப்பு: 15 மார்கழி 2023*
*முழு ஆய்வும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதி நாள்: 15 தை 2024*
*முற்கூட்டிய பதிவுக்கான இறுதி நாள்: 20 தை 2024*
*பங்கேற்பாளர் பதிவுக்கான இறுதி நாள்: 25 தை 2024*
*மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு: 01 மாசி 2024*

## மாநாட்டுப் பதிவு கட்டணம்

*உள்நாட்டுப் பங்கேற்பாளர்கள் (தேசிய அடையாள அட்டை அவசியம்): 2000/- (நேரடிப் பங்கேற்பு மட்டும்)*

*உள்நாட்டு மாணவர்கள்: 1000/- (நேரடிப் பங்கேற்பு மட்டும்)*

*சர்வதேச நாடுகளிலிருந்து சமூகமளிப்பவர்கள்: 10* US $ *(நேரடி மற்றும் மெய்நிகர்ப் பங்கேற்பு)*

*(பதிவுக் கட்டணம் செலுத்தும் முறை பின்னர் அறிவிக்கப்படும்)*

## தங்குமிட வசதிகள்

*நேரடியாக வருகை தரும் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கும் சர்வதேசப் பங்கேற்பாளருக்குத் தங்குமிட வசதிகள் வழங்கப்படும். (விபரங்கள் தொடரும்)*

## வெளியீட்டு விவரங்கள்

*ஆய்வுச் சுருக்கங்கள் ஆய்வு மாநாட்டு ஏற்பாட்டு நூலில் வெளியிடப்படும். மாநாட்டின் முன்வைப்புக்களின்போது வழங்கப்படும் மதிப்பீட்டுக் கருத்துக்கள் உள்ளடக்கப்பட்ட முழுமையான ஆய்வுக் கட்டுரைகள் பின்னர் நூலாக வெளியிடப்படும்.*

## தொடர்பு (விவரங்களைக் கோரல்

*பேராசிரியர் அருட்தந்தை ஞான பேட்ரிக்:* gnanapat@gmail.com
*பேராசிரியர் அருட்தந்தை யோ.கி. போல் றொகான்:* paulrohan@univ.jfn.ac.lk